போன்ற நண்பர்கள் நான் மூடி மறைத்து பேசிப் பழக்கப்பட்ட வன் அல்ல என்பதை தெரிந்த பிறகும் அந்த வார்த்தையை பயன் படுத்தியதற்காக நான் வருந்துகிறேன். 11-30 மணிக்கு நான் அவர்களை கலந்து பேசியதற்குப் பிறகு என்ன பேசிக் கொண் டோம் என்பதை மாண்புமிகு முதலைமச்சர் அவர்களுக்கு தெரி வித்து அதன் அடிப்படையில் கருத்துக்களை இந்த மாமன்றத்திற்கு தெரிவிக்க வேண்டும். இன்றைக்கு டெல்லி செல்கிற காரணத்தால் நான் இருக்க மாட்டேன். அந்த பொறுப்பை எப்போதும் ஒப்படைக்கின்ற இடமாகிய முதல் அமைச்சரிடம் நான் ஒப்படைக்கின்றேன் என்பதையும் தெரிவித்துக் கொண்டு பேச்சு வார்த்தைக்கு என்னை அனுமதியுங்கள் என்று உங்களது அனுமதியைப் பெற்று நான் விடைபெறுகிறேன். வணக்கம்.

(இ) பொறியியல் கல்லூரியைச் சேர்ந்த மாணவர்கள் பிரேக் சிஸ்டமுறையை எதிர்த்து நடத்தும் போராட்டம் குறித்து.

திரு. எஸ். ஆர். இராதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த பொறியி யல் கல்லூரியில் அனைத்துக் கல்லூரிகள் என்று சொல்லாவிட்டா லும் கூட சில கல்லூரிகளில் இன்றைக்கு தேர்வு முறையில் சில மாற்றங்கள் வேண்டும் என்பதற்காக தேர்வு நடைபெறுகிற நேரத்தில் மாணவர்கள் வேலை நிறுத்தம் செய்து கொண்டிருக்கி றார்கள். இந்த வேலை நிறுத்தம் 10, 15 நாட்களாக நடை பெற்ற காரணத்தால் மாணவர்களுக்கு தொல்லைகள் ஏற் படுகிறதோ இல்லையோ பெற்றோர்கள் தரப்பிலிருந்து தங்களுக்கு மிகப் பெரிய தொல்லையாக இருக்கிறது. இந்த வேலை நிறுத்தம், இது களையப்பட வேண்டும் என்பதற்காக பல்வேறு பெற்றோர்கள் கடிதங்கள் மூலமாக, தந்திகள் மூலமாக தெரி வித்து இருக்கிறார்கள். இது பல்கலைக் கழகத்திற்கு உரிய பிரச்சினை இல்லை என்று சொன்னாலும் அரசின் சார்பில் பல் கலைக் கழகத்திற்கோ, அல்லது சம்பந்தப்பட்ட கல்லூரிகளுக்கோ இந்த வேலை நிறுத்தம் நீக்கப்படுவதற்கு ஏதேனும் நல்ல முறையில் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கொள்கை பிரச்சினை என்று வருகிற போது கொஞ்சம் பிடிவாதமாக இருப்பார்கள். அந்த கொள்கை களை விடவேண்டும் என்று நிச்சயமாக நான் வற்புறுத்த மாட்டேன். ஆனால் தேர்வு முறையில் அவர்கள் அணுகுகிற முறையில் மாணவர்களாகிய அவர்கள் தெரிந்தோ, தெரியா

மலோ சில கோரிக்கைகளை வைத்து அதற்காக வேலை நிறுத்தம் என்ற முறையில் தேர்வு நேரத்தில் நடந்து கொண்டிருக்கிறது. ஆனால் நான் நேற்றைக்கு வேலூரில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சிக்குச் சென்ற நேரத்தில் வேலூரில் இருக்கிற பொறியியல் கல்லூரியில் அந்த வேலை நிறுத்தம் நடைபெறவில்லை என்று சொன்னார்கள். அங்கே இருக்கிற நிர்வாகத்தைச் சேர்ந்தவர்கள் அந்தக் கல்லூரி மாணவர்களை அழைத்து இந்த முறைகளை மாற்றுவதற்கு பல்கலைக் கழகமும் எடுக்க வேண்டிய முடிவுகள் இருக்கின்ற காரணத்தால் தேர்வு பாதிக்கப்படக் கூடாது என்று சொல்லி மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் கலந்து பேசியதன் காரணமாக அங்கே அந்த வேலை நிறுத்தம் தவிர்க்கப்பட்டிருக்கிறது. எனவே அந்த வகையில் இந்த வேலை நிறுத்தம் தவிர்க்கப்படுவதற்கும், உடனடியாக இந்த நிலையை மாற்றுவதற்கும் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களைக் கேட்கிறேன்.

* மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் இப்போது எழுப்பிய அந்தப் பிரச்சினை குறித்து நேற்றைய தினம் காலை 11 மணி அளவுக்குக் கவன ஈர்ப்பு என்ற முறையில் ஒரு குறிப்பினை என்னிடத்திலே கொடுத்தார்கள். அந்தக் கவன ஈர்ப்பு முறையாக கவனத்தை ஈர்த்து எங்கிருந்து பதில் வர வேண்டுமோ அங்கே அனுப்பப்பட்டிருக்கிறது. அந்தப் பதில் இன்னும் எனக்கு கிடைக்கவில்லை. காரணம் இது இந்த அரசைப் பொறுத்த நேரடியான பிரச்சினை அல்ல. பல்கலைக் கழகக் கல்வி முறையைப் பற்றிய ஒரு பிரச்சினை. ஏன் என்றால், இந்தத் தேர்வு எழுத வேண்டாம் என்று கேட்கிற சில மாணவர்கள், வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டவர்கள் பிரேக் சிஸ்டம் என்று இருக்கிற அந்த முறையைக் கைவிட வேண்டும் என்று கேட்கிறார்கள். பாலிடெக்னிக் அளவில் பிரேக் சிஸ்டம் முறையைக் கைவிட வேண்டும் என்று கேட்டபோது அது ஏற்கப்பட்டது. பாலிடெக்னிக், பல்கலைக் கழகப் படிப்பு வரன் முறைக்கு உட்பட்டது அல்ல. மேலும் பாலிடெக்னிக்கில் படிக்கிற மாணவர்கள் ஒரு தொழில் கல்வி என்ற முறையில் ஓரளவு தேர்ச்சி குறைவாக இருந்தாலும் கூட, அவரவர்கள் சில தொழில்களை தாங்களே தொடங்கி நடத்தக் கூடிய நிலை உள்ளது. தாங்களே தொழில் தொடங்கிவிட்ட பின்னர் தகுந்த தேர்ச்சியைத் தாங்களே தேடிக்கொள்கிறார்கள். எனவே அங்கு தேர்வில் வெற்றி பெறாவிட்டாலும் அந்தத் தேர்ச்சி அவரவர்கள் தேடிக்கொள்ளக் கூடிய ஒன்று என்ற ஒரு எண்ணத்தில் அங்கே இருந்த பிரேக் சிஸ்டம் நீக்கப்பட்டுவிட்டது. ஆனால் பல்கலைக் கழகப் படிப்பு என்பது பட்டம் வழங்குவதற்கான படிப்பாக இருக்கிற காரணத்தால், அந்தப் படிப்பில் தகுந்த

தேர்ச்சியை உடனுக்குடன் பெறாவிட்டாலும் கூட முதல் ஆண்டு பெற வேண்டிய தேர்ச்சியை இரண்டாம் ஆண்டுக்குள் பெற்று முடித்தால்தான் மூன்றாம் ஆண்டுக்குச் செல்லலாம் என்பது போல் வைத்து இருக்கிற முறையில் ''இட் இஸ் நாட் டோட்டல் பிரேக்'' படிக்கட்டுக்கள் முறையான பிரேக் தான் இப்போது இருக்கிறது. முதல் படிக்கட்டில் வெற்றி அடையாவிட்டாலும் மூன்றாவது படிக்கட்டுக்கு வருகிற போதாவது முதல் படிக்கட்டில் வெற்றி பெற்றிருக்க வேண்டும் என்பது போன்ற சில விதிகள் இருக்கின்றன. பல்கலைக் கழகத்தின் துணை வேந்தர் அவர்களுக்கு மாணவர்களின் வேண்டுகோள் அனுப்பப்பட்டு இருக்கிறது. இருந்தாலும் பல்கலைக் கழகத் துணை வேந்தர் ஒரு முறை என்னைக் காண்கிற போது துணை வேந்தரே கூடத் தனியாக இவைகளைப் பற்றி முடிவு எடுக்க முடியாது என்று கூறினார்.

10-15 மணி

நான் கூட ஆலோசனைதான் வழங்க முடியும். படிப்புக்காகக் கல்வியின் தரத்தைக் கூடுமான வரையில் ஒழுங்குபடுத்துவதற்காக இருக்கிற அக்கடமிக் கவுன்சில்தான் இந்த மாற்றம் பற்றி ஏற்றுக்கொள்ள வேண்டும். இது அங்கும் ஆலோசிக்கப்பட வேண்டிய ஒன்றாக இருக்குமே தவிர உடனடியாக ஏற்றுக்கொள்ள முடியாது.

அதே போல் பொறியியல் கல்லூரி மாணவர்கள் எல்லோரும் எல்லா இடத்திலும் பிரேக் சிஸ்டம் கூடாது என்று கேட்கவில்லை. சில கல்லூரிகளில் சில மாணவர்கள் இந்தத் தேர்வு வருகிற நேரத்தில் இந்த வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு இருக்கிறார்கள். உடனடியாக என்ன செய்ய முடியும் என்று எங்களால் தெரிவிக்க முடியவில்லை என்று பல்கலைக் கழகத் துணை வேந்தர் தெரிவித்தார். ஒருவேளை அதற்குப் பின்னர் ஏதேனும் அவருடைய எண்ணங்களில் மாற்றம் இருக்கிறதா அல்லது ஏதேனும் செய்யக் கூடியது இருக்கிறதா என்பது இன்றைக்கு என்னால் சொல்ல முடியாததாக இருக்கிறது.

அதைவிட முக்கியமாக சுய நிதிக் கல்லூரியில் சேர்ந்து பயில்கின்ற மாணவர்கள்தான் அவர்களில் ஒரு குறிப்பிட்ட ஒரு சாரார் அந்த சுய நிதிக் கல்லூரியில் அவர்கள் பெற்ற பயிற்சி போதாது என்ற காரணத்தால், நாங்கள் பயிற்சி பெற்றோமோ இல்லையோ மேல் வகுப்புக்கு அனுப்பப்பட வேண்டும் என்று கேட்கக்கூடிய ஒரு சூழ்நிலை உருவாகி இருக்கிறது. அதைப் பல்கலைக் கழகம் எந்த அளவுக்கு ஏற்றுக்கொள்ள முடியும் என்பதைப் பார்த்துத் தான் தீர்மானிக்க முடியும் என்று நான் தெரிவிக்க விரும்புகிறேன்.